# ஊவா மாகாண சபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2013 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

#### 1.2.2 ஏனைய கணக்குகள்

2013 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2012 ஆம் ஆண்டிற்குரிய | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் வகைகள் | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப் படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 | இல்லை | இல்லை |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01 | இல்லை | இல்லை |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 28 | 22 | 06 | 06 |
| (vi) | வணிக முற்பணக் கணக்குகள் | 09 | 03 | 06 | 02 |
| (v) | நிதியக் கணக்குகள் | 08 | 05 | 03 | 30 |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் | 03 | இல்லை | 03 | 28 |

### 1.2.3 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் காண்பிக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறான சொத்துக்கள் இருப்பதாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண அவசர நிலைமைகள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியம் ரூபா 8,743,156 ஆக காணப்பட்டதுடன் மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் அதற்கொப்பான மீதி ரூபா 7,555,000 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 1,179,156 வேறுபாடு காணப்பட்டது.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 442,064,868 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செவனகல பிரதேச செயலகத்திற்கும் சிறு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் உரித்தாக ரூபா 1,136,304 மொத்தமான வரவு மீதி காணப்பட்டது.

(ii) 08 நிறுவனங்களிற்குரிய ரூபா 284,489,182 ஆன செலவு மீதியும் ஒரு நிறுவனத்திற்குரிய ரூபா 1,106,304 வரவு மீதியும் தொடர்பில் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 33 நிறுவனங்களிற்குரிய ரூபா 37,922,945 மொத்தமான 02 ஆண்டுகளைக் கடந்த செலவு மீதி தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் கீழ் நீண்ட காலமாக நிலவிவருகின்ற ரூபா 43,404,681 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியும் நானாவிதக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 4,300,000 ஆன நீண்ட காலமாக நிலவிவருகின்ற கடன் கொடுத்தோர் மீதியும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1989 இன் 02 ஆம் இலக்க சமூக நலனோம்பல் மறுசீரமைப்பு நிதியத்தின் நியதிச்சட்டத்தின் படி தாபிக்கப்பட்டிருந்த ஊவா மாகாண சமூக சேவைகள் நிதியத்தின் நடைமுறை வங்கிக் கணக்கு 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மூடிவிடப்பட்டு அதிலிருந்த ரூபா 53,748 தொகை 2012 மார்ச் 14 ஆந் திகதி ஊவா மாகாண பிரதான

செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி, 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி முதல் இந் நிதியம் செயற்படாதிருந்ததுடன் 2012 இன் ஊவா மகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் ரூபா 46,252 மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்கள் கணக்குகளின் ரூபா 44,752,087 மொத்தமான மீதியினுள் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிற்குரிய கணக்கீட்டுக் குறைபாடுகளாக இனங்காணப்பட்டிருந்த தியதலாவ மாவட்ட இயந்திர பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான ரூபா 21,721,200 முற்பணங்கள் மீதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியிருந்த மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் ரூபா 886,861,328 மொத்தமான மீதியில் 08 கணக்குகளுடன் தொடர்புடைய 10 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட ரூபா 4,389,721 மொத்தமான வரவு மீதியும் ரூபா 1,115,681 மொத்தமான செலவு மீதியும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 திசெம்பர் 31 அளவில் கிடைத்திருந்த ரூபா 98,809,444 மொத்தமான வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் படி கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியில் இறுதி இருப்பு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பொரலந்த கால்நடைப் பண்ணையில் 2012 திசெம்பர் 31 இல் காணப்பட்ட 06 இருப்பு விடயங்கள் ரூபா 11,848 ஆன விற்பனை விலையில் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக 02 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. 06 ஆம் இலக்க கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் வருமானத்தைக் கணக்கீடு செய்கையில் சேகரிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆண்டிற்குரிய வருமானம் முடிந்தளவிற்கு அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.5. கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முகாமைத்துவத் திணைக்களத்தின் புத்தகங்களில் காண்பிக்கப்பட்டுள்ள மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணக் கணக்குகளிற்கும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 06 அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் அத்திகதியில் உள்ளவாறு காண்பிக்கப்பட்டிருந்த அதனையொத்த மீதிகளின் மொத்தத்திற்குமிடையே ரூபா 8,162,972 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) ஊவா மாகாண சபையின் 05 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்குரிய மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் தனிப்பட்ட கடன் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் படியான மீதிகளின் மொத்தம் ரூபா 666,838,955 ஆகக் காணப்பட்டதுடன் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படியான மீதி ரூபா 671,889,246 ஆகக் காணப்பட்டது. அதன் படி ரூபா 5,050,291 வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண விவசாய, கமநல அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி, நண்ணீர் மீன்பிடித் தொழில், சுற்றாடல் மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் படி 2012 ஆம் ஆண்டினுள் மொத்த செலவு வைத்தல்கள் ரூபா 6,903,596 ஆன போதிலும், சபையின் நிதிக்கூற்றுக்களின் படி மொத்த செலவு வைத்தல்கள் ரூபா 7,054,127 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 150,531 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) ஊவா மாகாண சபை செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் II ஆம் குறிப்பில் காண்பிக்கப்பட்டுள்ள மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் வரவு மற்றும் செலவு மீதிகள் மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளுடன் முறையே ரூபா 11,950 மற்றும் 345,075 தொகைகளால் வேறுபட்டுக் காணப்பட்டது.

### 1.2.7 கட்டுநிதிக் கணக்கு

10 கட்டுநிதிக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 3,356,412,477 மொத்தமான கட்டுநிதி மீதிகள் 2012 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.8 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்த 11 அலுவலகங்களிற்கு உரித்தான ரூபா 7,786,353 கூட்டுத்தொகையான 333 வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர் விவகாரங்கள், கூட்டுறவு மற்றும் உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் காணப்பட்ட இனங்காணப்படாத மீதி ரூபா 340,269 ஆகும்.

(இ) ஊவா மாகாண சபையின் அலுவலக உதவியாளர்களை முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டமையால் மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 243,920 செலவினம் 2011 திசெம்பர் 26 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அப் பரீட்சையினை மீண்டும் நடாத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 31 வரை அத்தொகையினை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊவா மாகாணத்தின் இளைஞர் விவகார, விளையாட்டுக்கள், சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியிருந்த 41 ஆம் இலக்க கணக்குகளிற்கான குறிப்பின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 20,149,483 ஆன போதிலும், கட்டுப்பாட்டுக் கணக்கின் படி அதனையொத்த மீதி ரூபா 20,669,450 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 519,967 வேறுபாடு காணப்பட்டது.

(உ) பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 110 பொது வைப்பு மீதிகளின் ரூபா 24,752,085 கூட்டுத்தொகை இனங்காணப்படாத மீதியாக இருந்ததுடன், ஓய்வூதியங்கள் பணிப்பாளரின் பெயரில் 15 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 3,669,049 தொகையும் 31 சந்தர்ப்பங்களில்

அறவிடப்பட்டிருந்த காப்புறுதித் தவணைப்பணம் ரூபா 250,889 தொகையும் தீர்க்கப்படாது 2013 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2008 இன் சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது மாணவியொருவருக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து பரிசளிக்கப்பட்ட ரூபா 6,000 புலமைப்பரிசில் தொகையும், அரசாங்க சேவைகள் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 5,004 உதவு தொகையும், வலயப் பாடசாலைகளிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது திருப்பியனுப்பப்பட்டிருந்த ரூபா 11,579,143 தர உள்ளீட்டுத் தொகையும் நீண்ட காலமாக விளைவற்றதாக பசறை வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(எ) மாகாண சபையின் 02 திணைக்களங்களினது பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் மொத்தம் ரூபா 51,080,887 ஆகக் காணப்பட்டதுடன் நிதி முகாமைத்துவ திணைக்களத்தின் அறிக்கையின் படி அந்த மீதிகளின் மொத்தம் ரூபா 50,086,534 ஆக இருந்தது. அதன்படி ரூபா 994,353 வேறுபாடு காணப்பட்டது.

(ஏ) ஊவா மாகாண சபையின் கல்வித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு பொழிப்பு அறிக்கையில் பொது வைப்புக் கணக்கின் வருட ஆரம்ப மீதியும் ஆண்டின் இறுதி மீதியும் நிதி முகாமைத்துவ திணைக்களத்தின் புத்தகத்தின் படியான அதனையொத்த மீதிகளுடன் முறையே ரூபா 119,608,295 ஆலும் ரூபா 244,755,575 ஆலும் கணக்கிணங்கவில்லை.

### 1.2.9 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண பிரதான அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, கல்வி, உள்ளூராட்சி, கலாச்சார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாட்டு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாண அமைச்சின் கணக்கின் படி, ஊவா மாகாண அச்சக முற்பண நடவடிக்கையிலிருந்து 2012 திசெம்பர் 31 இல் பெறவேண்டியிருந்த மீதி ரூபா 2,932,993 ஆகும்.

(ஆ) 1991 – 2004 காலப்பகுதியில் அரசாங்க நிறுவனங்களின் 868 ஊழியர்களுக்காக கடனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த ஆடைகளிலிருந்து புடவைக் கைத்தொழில் முற்பணக் கணக்கிற்கு ரூபா 2,765,672 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

### 1.2.10 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாதிருந்ததுடன், அந்த ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,452,613,953 ஆக இருந்தது.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 80,570,890 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) பதுளை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான சகல வாக்குப்பணப் பேரேடுகளும் சமப்படுத்தப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்காமையால் செலவின விடயங்களிலுள்ள செலவுகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.11 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு | - | ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்திற்குரிய சகல உத்தியோகபூர்வ வதிவிடங்களிலுமிருந்து சிக்கன வாடகையினை அறவிடுவதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| XIX ஆம் அத்தியாயத்தின் 6.14 ஆம் பிரிவு மற்றும் 7.2 ஆம் பிரிவு | 26,005 | ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தில் 2011 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2012 செப்தெம்பர் 01 ஆந் திகிதி வரையான 13 மாத காலம் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் குடியிருந்து வந்திருந்த உத்தியோகத்தரிடமிருந்து தண்டப்பண |

| | | |
|---|---|---|
| | | வாடகை அறவிடப்பட்டிருக்கவிவல்லை. |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | 2,679,766 | ஊவா மாகாண சபையின் 09 நிறுவனங்களினால் 40 சதவீத வரம்பினை மீறி 63 உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 120,120 | ஊவா மாகாண சுகாதார, சுதேச வைத்திய, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் அலுவல்கள், பெண்கள் விவகார அமைச்சின் முற்பணக் கணக்கின் வரவு மீதியில் உள்ளடங்கியிருந்த அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதிகளை பிணைதாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 7.5 ஆம் பிரிவு | 158,719 | ஊவா மைாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தினால் காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக உத்தியோகத்தர் ஒருவருக்கு கடன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. அக்கடன் தொகை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்தவதற்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அற்றோனி அதிகாரத்தினை ஒப்படைக்கும் அற்றோனி அனுமதிப்பத்திரமும் காணியின் உறுதியும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் படி அக்கடன் தொகையினை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 571 (3) | 3,780,618 | ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 201 வைப்புக்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. |

(iii) ஊவா மாகாண நிதி ஒழுங்கு விதிகள் கையேடு

| | | |
|---|---|---|
| மாகாண நிதி ஒழுங்குவிதி 104 | 143,800 | 2012 மார்ச் 06 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் வாகனம் தொடர்பாக நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 133 | - | மீளாய்வாண்டில் ஒக்கம்பிட்டிய விதைகள் பண்ணை மற்றும் ஆளுனர் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 271.2.2 | 668,812 | 23 சந்தர்ப்பங்களில் செலுத்தப்படாதிருந்த ஆசிரியர் சம்பளங்கள் 2004 யூலை 28 ஆந் திகதி முதல் பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 371.2.2 | 485,014 | மீளாய்வாண்டில் மகாண சபை அமைச்சு மற்றும் இரண்டு மாகாணத் திணைக்களங்களின் 04 உத்தியோகத்தர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த உப கட்டுநிதிகள் 2013 சனவரி 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட் டிருக்கவில்லை. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 371.2.7 | 181,000 | மகாண சபை அமைச்சு ஒன்றினால் 2011 ஆம் அண்டினுள் 07 சந்தர்ப்பங்களில் செலுத்தப் பட்டிருந்த உப கட்டுநிதிகள் 2013 சனவரி 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 504.1 | - | ஊவா மாகாண அச்சகத்தின் வர்த்தக முற்பணக் கணக்கிற்காக காலாண்டின் இறுதியில் குறித்துரைத்த எல்லைகள் கடைப்பிடிக்கப்பட் டிருந்தமைக்காக நிதி ஒழுங்குவிதியின் பிரகாரமான கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| மாகாண நிதி ஒழுங்குவிதி 757(2) மற்றும் (3) | - | மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 10 அலுவலகங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி இனங்காணப்பட்டிருந்த 496 உபகரணங்களின் குறைவு தொடர்பில் 2013 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 772(1) | | மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 05 அலுவலகங்களில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத மற்றும் அழிப்பதற்காக சிபார்சு செய்யப்பட்டிருந்த பொருட்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| மாகாண நிதி ஒழுங்குவிதி 896 | - | மாகாண சபையின் 14 நிறுவனங்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(iv) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| * 1990 ஒக்தோபர் 18 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | மகாண சபை அமைச்சு மற்றும் இரண்டு மாகாணத் திணைக்களங்களினால் 11 வாகனங்கள் தொடர்பில் 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. |
| * 1996 மார்ச் 15 ஆம் திகதிய 08/96 ஆம் இலக்க சுற்றறிக்கை | 425,386 | பிணை நிபந்தனைகளுக்கு முரணாக இரண்டு மாகாணத் திணைக்களங்களின் 08 உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தன. |
| * 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | - | மாகாண சபை அமைச்சின் அமைச்சரவை பதவியணியினர் நேரப் பதிவு இயந்திரத்தின் ஊடாக சேவைக்கு சமூகமளித்தல் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

(v) திறைசேரிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | 170,100 | ஒக்கம்பிடிய விதைகள் பண்ணை, ஊவா மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் மற்றும் பாடசாலைகளில் கணனிப் பாகங்கள் மற்றும் வன்பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(vi) ஏனைய சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009/02 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை | - | ஒக்கம்பிடிய விதைகள் பண்ணையின் சொத்துக்களிற்காக பொது 287 படிவத்தின் பிரகாரம் பேணிவரப்பட வேண்டிய சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

2012 ஆம் ஆண்டில் ஊவா மாகாணத்தின் இளைஞர் விவகார, விளையாட்டுக்கள், சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் செயலாளரால் உழைக்கப்பட்டிருந்த மேலதிக படிகளும் ஏனைய உழைப்புக்களும் மாதாந்த வேதனங்களில் உள்ளடக்கப்படாது உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிக்கப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 351,277 வரித் தொகை குறைவாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

## 1.2.12 முற்பணக் கணக்கு எல்லைகளைப் பின்பற்றாமை

(அ) ஊவா மாகாண சபை நிதி ஒழுங்கு விதி 503 இல் உள்ள ஏற்பாட்டிற்கு முரணாக 02 முற்பணக் கணக்கு விடயங்களின் செலவினங்களது ஆகக்கூடிய எல்லை ரூபா 88,950,854 ஆல் விஞ்சப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | முற்பண நடவடிக்கை | செலவின் ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியான செலவினம் | எல்லை மீறல் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 70601 | மாகாண அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் | 2,500,000 | 2,505,000 | 5,000 |
| 71001 | -மேற்படி- | 70,000,000 | 156,220,305 | 86,220,305 |
| 72601 | -மேற்படி- | 9,000,000 | 11,725,549 | 2,725,549 |
| | மொத்தம் | | | 88,950,854 |

(ஆ) 10 விடயங்களின் வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லைகள் ரூபா 168,933,981 ஆல் மீறப்பட்டிருந்ததுடன் 02 விடயங்களின் பெறுவனவுகளின் ஆகக்குறைந்த எல்லைகள் ரூபா 825,115 ஆல் குறைவடைந்திருந்தன.

## 2. வருமான முகாமைத்துவம்

(அ) நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கையின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 202,778 ஆகும்.

(ஆ) ஊவா மாகாண வருமான ஆணையாளரின் பெயரில் பேணிவரப்படுகின்ற சேகரிப்புக் கணக்குகளிற்கு மீளாய்வாண்டில் கிடைத்திருந்த வருமானங்கள் மற்றும் ஊவா மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் சேகரித்திருந்த ரூபா 99,872,887 கூட்டுத்தொகையான வருமானங்கள் ஆண்டின் திரட்டிய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தில் ரூபா 330,988,908 பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 501,381,768 ஆக இருந்தது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 832,370,676 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 3.2 வருமானங்களும் செலவுகளும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மாகாண சபை விடயங்களுக் குரிய வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 1,468,098,000 | 1,692,690,962 | 224,592,962 | 827,326,000 | 1,503,998,803 | 676,672,803 |
| வரியல்லாத வருமானம் | 667,902,000 | 410,288,846 | (257,613,154) | 408,674,000 | 303,608,456 | (105,065,544) |
| அரசாங்க மானியம் | 15,475,826,000 | 10,127,233,740 | (5,348,592,260) | 10,347,000,000 | 10,404,988,682 | 57,988,682 |
| மொத்தம் | 17,611,826,000 | 12,230,213,548 | (5,381,612,452) | 11,347,000,000 | 12,212,595,941 | 629,595,941 |

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| செலவினம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளணி வேதனம் | 9,246,704,840 | 9,073,648,538 | 173,056,302 | 8,380,903,944 | 8,271,032,237 | 109,871,707 |
| ஏனைய மீண்டுவருபவை | 2,774,081,661 | 2,181,727,156 | 592,354,505 | 2,462,730,607 | 1,826,468,557 | 636,262,050 |
| அரசாங்க முதலீடு | 4,049,435,109 | 1,305,826,763 | 2,743,608,346 | 3,627,634,865 | 1,613,713,379 | 2,013,921,486 |
| மொத்தம் | 16,070,221,610 | 12,561,202,457 | 3,509,019,153 | 14,471,269,416 | 11,711,214,173 | 2,760,055,243 |

மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 12,561,202,457 ஆகும். அதில் 90 சதவீதம் மீண்டுவரும் செலவினமாக இருந்ததுடன், 10 சதவீதம் மூலதனச் செலவினமாக இருந்தது

## 4. வர்த்தக முற்பணக் கணக்குகள்

### 4.1 ஊவா மாகாண அச்சக முற்பணங்கள் கணக்கு

மீளாய்வாண்டில் ஊவா மாகாண அச்சக முற்பணங்கள் கணக்கிற்குரிய வாக்குப்பணப் பேரேட்டு மீதிகளுக்கும் பேரேட்டுக் கணக்கிற்குமிடையே ரூபா 504,151 தொகையாலும், பரீட்சை மீதிக்கும் வருமானக் கூற்றிற்குமிடையே ரூபா 6,580 தொகையாலும், பரீட்சை மீதிக்கும் பேரேட்டுக் கணக்கிற்குமிடையே ரூபா 433,592 தொகையாலும், சொத்துக்கள் பேரேட்டிற்கும் கணக்கின் நிலையான சொத்துக்கள் பட்டோலைக்குமிடையே ரூபா 101,357 தொகையாலும், வாக்குப்பணப் பேரேட்டிற்கும் சில்லறைக் காசேட்டிற்குமிடையே ரூபா 19,982 தொகையாலும் கணக்கிணங்காமைகள் காணப்பட்டன.

### 4.2 ஒக்கம்பிடிய விதைகள் பண்ணை வர்த்தக முற்பணங்கள் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் படி 2012 திசெம்பர் 31 இல் காணப்பட்ட இருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியில் கணக்கீடு செய்யப்படாது ரூபா 721,525 ஆன விற்பனை விலையில் கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பல வருடங்களாக நிலவிவருகின்ற வங்கிக் கூற்றிலுள்ள ரூபா 24,555 நேரடி வைப்புக்களை கணக்கீடு செய்வதற்கும் செலுத்த வேண்டிய ரூபா 333,561 புரள்வு வரியினை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 விதை உருளைக்கிழங்கை இறக்குமதி செய்து விநியோகித்தல் முற்பணங்கள் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கருப்புப் புள்ளி நோய் பீடிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருந்த விதை கிழங்குகளிற்காக நெதர்லாந்தின் J. VAN DIJK DRONTEN BV நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,893,741 தொகை பெறவேண்டிய மீதியாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதிவேடுகள், பேரேட்டுக் கணக்குகள் மற்றும் கடன்பட்டோர் பட்டோலைகள் போன்ற தேவையான சான்றுகள் இன்மை காரணமாக ரூபா 33,501,491 கூட்டுத்தொகைக்குரிய 03 கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**5. செயற்பாட்டு மீளாய்வு**

**5.1 செயலாற்றல்**

**5.1.1 நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்**

726-50-4-2013(2) ஆம் இலக்க (இயந்திரங்கள்-வாகனங்களை சேவை செய்வதற்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்) செலவின விடயத்தின் கீழ் வருடாந்த நிதிக்கூற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,000,000 ஏற்பாட்டிலிருந்து ரூபா 3,461,783 தொகை செலவின விடயத்தின் நோக்கத்திற்கு புறம்பான நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்தது.

**5.1.2 போதியளவில் நிறைவேற்றப்படாத நோக்கங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண நூலக நியதிச்சட்டத்தின் iv ஆம் பிரிவின் 26.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊவா மாகாண நூலகச் சேவைகள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய 15 சேவைகளில் 13 இனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஊவா மாகாண நூலகச் சேவைகள் சபையினால் மீளாய்வாண்டிற்காக செலவிடப்பட்டிருந்த ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 2,626,236 இல் 63 சதவீதமானவை முறையற்ற விதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த பதவியணியினருக்காக செலவிடப்பட்டிருந்தமையால் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒட்டுமொத்தச் செலவினத்தில் 37 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாணத்தின் இளைஞர் விவகார, விளையாட்டுக்கள், சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் மாகாண அபிவிருத்தித் திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 715 கருத்திட்டப் பிரேரணைகளை அமுல்படுத்தப்படாமைக்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஊவா மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக நிதி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த மூன்றாண்டுத் திட்டத்தில் மின்வலு மற்றும் சக்திவளத் துறைக்கு உரிய 04 கருத்திட்டப் பிரேரணைகளிற்கு ரூபா 16.9 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தக் கருத்திட்டப் பிரேரணைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதுளை பிரதி மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கிராந்துருகோட்டே சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 03 கிரயப்பட்டியல்களில் உள்ளடங்கியிருந்த மருந்து இருப்புக்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மருந்துகளை விநியோகிக்கையில் முறையான கட்டுப்பாடு காணப்படாமை காரணமாக காலாவதியான ஊசிமருந்துகள் மற்றும் 14 மருந்து விடயங்கள் ஆதார வைத்தியசாலைக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஊவா மாகாண சபையின் 2011 இன் 03 ஆம் இலக்க நியதிச்சட்டத்தின் 51(1)(அ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறை பதிவாளரினால் அனுமதிக்கப்பட்ட நபரொருவர் அல்லது நிறுவனமொன்றைக் கொண்டு சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டில் அதில் 50 சதவீத முன்னேற்றத்தினை எட்டுவதற்கேனும் திணைக்களம் தவறியிருந்தது.

(இ) மாவட்ட பொறியியலாளர் அலவலகத்தினால் 2008 முதல் 2012 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகைக் கட்டணங்கள் ரூபா 24,742,979 ஆகக் காணப்பட்டது. இந்த நிலுவை வாடகைக் கட்டணத்திலிருந்து ரூபா 995,009 தொகை தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிவாரி ஆட்களிடமிருந்தும் ரூபா 8,602,620 தொகை மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் பொதுமக்கள் உதவிகள் மற்றும் நோய்நிவாரண உதவிகளை செலுத்துவதற்காக மாதாந்தம் தபால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா

182,001,457 தொகையில் ரூபா 17,290,841 தொகை நலனாளிகள் முன்வந்திருக்காமை காரணமாக திருப்பியனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(உ) பண்டாரவளை கல்வி வலயத்தின் கீழுள்ள 93 மாணவர்களுடன் கூடிய விஹாரகல தமிழ் வித்தியாலயத்தில் 2009 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 60 x 20 சதுர அடி கட்டிடத்திற்காக கணக்காய்வுத் திகதியான 2013 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை மின்சார வசதி வழங்கப்படாதிருந்ததுடன் நீண்ட காலமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்ற பிரதான மண்டபம் மற்றும் ஒரேயொரு ஆசிரியர் விடுதி என்பவற்றை திருத்தியமைத்துப் பயன்படுத்துவதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஊ) பசறை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு வரிசை அமைச்சு, ஏனைய பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களினால் வழங்கப்படுகின்ற பல்வேறு வளங்கள் தொடர்பிலான தகவல்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் காணப்படாதிருந்ததுடன் வலயக் கல்வி அலுவலகத்திற்கும் பாடசாலைகளிற்கும் இடையே ஒருங்கிணைப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(எ) பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள கணனிகள் மற்றும் உப பாகங்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை, கணனி தொடர்பான அறிவுடைய ஆசிரியர்கள் இல்லாமை, உபகரணங்களைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான உட்டகட்டமைப்பு வசதிகள் காணப்படாமை, வழங்கப்பட்டுள்ள அநேக உபகரணங்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை, உரிய திருத்தங்கள் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்காமை, உபகரணங்களைப் பாவிப்பதற்குப் போதியளவு மாணவர்கள் இல்லாமை, அநேக பாடசாலைகளில் பெறுபேறுகள் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமை, அதிபர்களுக்கும் வலயக் கல்வி அலுவலகத்திற்கும் இடையே தொடர்பாடல் பலவீனமடைந்துள்ளமை மற்றும் வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் அவற்றின் தர உள்ளீடு தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் வலயக் கல்வி அலவலகத்தில் இல்லாமை போன்ற நலிவுகள் பசறை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் காணப்பட்டன. ஆகையால் அந்நடவடிக்கைகள் தொடர்பில் பசறை வலயக் கல்வி அலுவலகத்தினால் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சுகாதார அமைச்சிடமிருந்து மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 12 வாகனங்களுக்கு பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த இரண்டு வாகன விபத்துக்களினால் ஏற்பட்டிருந்த ரூபா

244,270 நட்டம் தொடர்பில் பொறுப்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டில் ''ஜாதிக சவிய'' கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கர்ப்பிணிகள் நிலையங்களுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 6,286,156 தொகையில் ரூபா 412,000 இனை திருப்பியனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 279,569 தொகை பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டு 2013 மார்ச் 05 ஆந் திகதி வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதி ஊவா மாகாண சுகாதார அமைச்சினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 53 கணனிகளும் உப பாகங்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது 2013 யூன் 20 ஆந் திகதியன்றும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்த பல்வேறுவகையான 77 உபகரணங்கள் எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஔ) மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் 2011 ஆம் ஆண்டில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பல்வேறு நிறுவனங்களின் பெயரில் வழங்கியிருந்த ரூபா 355,345 பெறுமதியான 05 காசோலைகள் 2013 யூன் 28 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 5.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

ஊவா மாகாண இளைஞர் விவகார, விளையாட்டுக்கள், சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சரின் பதவியணியினரின் ரூபா 373,301 தொகையான சம்பளங்கள் காசாக செலுத்தப்பட்டிருந்தன. அமைச்சருக்கோ அல்லது உத்தியோகத்தர்களிற்கோ சம்பளம் அல்லது படிகளைச் செலுத்துகையில் காசோலைகள் மூலம் செலுத்தாது காசோலைகள் காசாக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமையால் நிதி மோசடிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 நிதிகளை குறைவாகப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 13 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 28 செலவின விடயங்களின் கீழ் ரூபா 33,404,400 தேறிய ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக 712-3-7-2106-1 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 30,000,000 ஏற்பாட்டிலிருந்து ரூபா 17,668,159 தொகை போதியளவு கட்டுநிதி கிடைத்திருக்கவில்லை எனக் காரணம் காட்டப்பட்டு சேமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 15,000,000 இற்காக மாத்திரம் கட்டுநிதி கோரப்பட்டிருந்தது.

(இ) யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு உதவிகளின் கீழ் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக 712-3-7-2106-2 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த முழுமையான ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,000,000 இற்காக மாத்திரம் கட்டுநிதி கொரப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றின் மூலம் ஊவா மாகாண பிரதான அமைச்சரின் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறுவனவாகவும் ஏற்பாட்டுத் தொகையிலிருந்து உண்மையாகக் கிடைத்திருந்த ரூபா 4,500,000 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் கிடைப்பனவாகவும் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டின் வருமானம் ரூபா 9,500,000 ஆக ரூபா 5,000,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 34,500 ஆன மீளாய்வாண்டின் பற்றாக்குறை நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,965,500 வருமான மிகையாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 4,093,664 ஆகக் காணப்பட்டிருக்க வெண்டிய திரண்ட நிதியம் ரூபா 4,133,664 என ரூபா 34,500 ஆல் அதிகமாக தவறாக வெளிக்காட்டப்பட்டிருந்தது.

## 5.5 அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டினை மீறி செலவுகளைச் செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் சம்பளம் மற்றும் கூலிகளை தவிர மேலதிகநேரப் படி, ஏனைய பொருட்கள் சேவைகளுக்காக 21 செலவின விடயங்களின் ஏற்பாடுகளிலிருந்து 2 சதவீதம் சேமிக்கப்படாதிருந்ததுடன் மீண்டெழும் செலவின விடயங்களிற்கான ஏற்பாடுகள் 02 சதவீதத்திற்கும் குறைவாக பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண இளைஞர் விவகார, விளையாட்டுக்கள், சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக்

கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் 11 செலவின விடயங்களுக்கான ஏற்பாடுகளிலிருந்து நிதி திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் படி 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின ஏற்பாடுகளிலிருந்து முறையே 02 சதவீதம் மற்றும் 09 சதவீதம் சேமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊவா மாகாண பிரதான செயலாளரின் 2012 நொவம்பர் 15 ஆந் திகதிய பீ/பீயூடீ/சீஜஆர்/2012 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலதனச் செலவின விடயமொன்றின் ஏற்பாட்டிலிருந்து பிடித்து வைக்கப்பட வேண்டிய தொகையினைக் காட்டிலும் ரூபா 99,000 குறைவாக பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

## 5.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

மகாண சபைக்குச் சொந்தமான கீழே குறிப்பிடப்பட்ட சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(அ) ஊவா மகாண சபைக்குச் சொந்தமான அமைச்சுக்கள், திணைக்களங்கள், அலுவலகங்கள் மற்றும் 18 பாடசாலைகளுக்குரிய ரூபா 2,055,541 பெறுமதியான பௌதீக வளங்கள் 01 முதல் 10 வருட காலமாக விளைவற்று அல்லது குறவைாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிராந்துருகோட்டே வைத்தியசாலையில் சிறுநீரகப் பிரிவிற்காக போதியளவு களஞ்சிய வசதி மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அகற்றப்பட்டிருந்த மருத்துவ உபகரண நாற்காலிகள், பரிசோதனைப் பாகங்கள் போன்றன நோயாளிகளைப் பரிசோதிக்கும் இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. மின்சாரத் தடை ஏற்படுகையில் வைத்தியசாலைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட மின்பிறப்பாக்கியினை பயன்படுத்தி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் செயய்ப்பட்டிருக்காமையால் நோயாளிகளைப் பரிசோதிப்பதற்கும் முடியாதிருந்தது.

(இ) மின்சாரத் தேவை குறித்து பொருத்தமான சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர் அலுவல்கள் மற்றும் கூட்டுறவு, உணவு வழங்கல் மற்றும் விநியோக அமைச்சினால் மொனராகலை அரிசி தயாரித்தல் நிலையம் தாபிக்கப்பட்டிருந்தமை காரணமாக 80 கிலோ வொட்ஸ் மின்சார இயலளவு இன்மையால் நெல்லை அரிசியாக்கல் இரு தடவைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதன் படி முதலில் நெல்லிருந்து உமியை

அகற்றலும் இரண்டாவதாக அரிசி தயாரித்தலும் இடம்பெறுகின்றது. நாளொன்றிற்கு 7000 கிலோ கிராம் நெல்லை அரிசியாக்கத்தக்க இயந்திர முறைமையொன்றிலிருந்து 3500 கிலோகிராமை மாத்திரம் அரிசியாக்க முடிந்திருந்தமையால் இயந்திரங்களின் உரிய இயலளவைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது போயிருந்தது.

(ஈ) ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வாகனமொன்று 2012 மே 14 ஆந் திகதி முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்காததுடன் 2011 பெப்ரவரி 08 ஆந் திகதிய பீஎவ்டீ/ஏஎஸ்டீ/04/01 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

(உ) ஊவா மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உடுவர போதைப்பொருள் நிவாரண மற்றும் மறுசீரமைப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்காக 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஒக்தோபர் மாதம் வரை நிலையத்தை தாபிக்கும் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த அநேக கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல்வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) பலங்கொட பெருந்தோட்டக் கம்பனியொன்றின் தோட்டத்திற்குச் சொந்தமான ஆளுனர் உத்தியோகபூர்வ இல்லத்தை மாகாண சபைக்குக் கையேற்பதற்காக 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பலாங்கொடை பிரதேச செயலகத்தில் ரூபா 8,500,000 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2013 மே மாதம் வரை இச்சொத்து கையேற்கப்படாதிருந்ததுடன் இத்தொகை ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அப்பெறுமதி 700-3-2-2105 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் அலுவலகத்தினால் கையேற்கப்பட்ட சொத்தொன்றாக ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லா சொத்துக்கள் அசைவுக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊவா மாகாண ஆளுனரின் செயலாளருக்கு 2008 யூன் 26 ஆந் திகதிய 2008/14 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2012 ஒக்தோபர் 08 அந் திகதிய BD/A/AO/BC ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் போக்குவரத்துப் படியாக மாதாந்தம் ரூபா 30,000 வீதம் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 1,500,000 தொகையும், மாதாந்த எரிபொருள் படியாக அக்காலத்திற்கு ரூபா

1,017,048 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயணங்களிற்காக நிறுவனத்தின் குழாம் வாகனத்தைப் பயன்படுத்தி 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை எரிபொருள் முற்பணமாக ரூபா 110,888 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியலாளர் சேவை) அலவலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களிற்காக ரூபா 36,000 செலுத்தி 02 கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) ஊவா மாகாண பிரதான அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, கல்வி, உள்ளுராட்சி, கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாட்டு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்கள் அமைச்சின் செயலாளரினால் கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளைப் பின்பற்றாது மாதாந்தம் ரூபா 31,712 இனை செலுத்தும் அடிப்படையில் ஊவா மாகாண நூலகச் சேவைகள் சபையின் வளவினை சுத்தீகரிக்கும் நடவடிக்கைகள் 2009 யூன் 01 முதல் 2010 யூன் 01 ஆந் திகதி வரை தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2010 யூன் 01 ஆம் திகதி உடன்படிக்கைக் காலம் முடிவுற்ற பின்னரும் உடன்படிக்கை புதுப்பிக்கப்படாது கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரை இந்த நிறுவனத்திடமிருந்து சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறித்த காலத்தினுள் இந்த நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உடன்படிக்கையின் பிரகாரம் வளவின் உட்புறத்தைப் போன்றே வெளிப்புறத்தை அண்மித்த பகுதிகளின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் குறித்த நிறுவனத்தினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், வளவினை அண்மித்த பிரதேசங்களின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளிற்காக அமையத் தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கு 2008 முதல் 2012 திசெம்பர் 31 வரை மாகாண நூலகச் சேவைகள் சபையின் வருமானத்திருந்து ரூபா 119,930 தொகையும் 2006 ஒக்தோபர் 04 முதல் 2012 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரை ஊவா மகாகண கல்வித் திணைக்களத்தினால் ரூபா 738,934 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. அச்செலுத்துகைகளிற்கு மேலதிகமாக வளவின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டில் நாற்கூலி அடிப்படையில் சேவையினைப் பெற்றுக்கொண்டிருந்த ஊழியர் ஒருவருக்கு ரூபா 5,000 செலுத்தப்பட்டிருந்தது.

## 5.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட இனங்காணப்பட்ட நட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தியதலாவ பிரதேச பொறியிலாளர் (வீதிகள்) அலுவலகத்தின் தோட்ட வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாயபெத்த சந்தியின் ஊடாக சென்ரிகெதரின் சந்தி வரையான பலகல வீதியின் நாயபெத்த பகுதியை நிர்மாணிக்கையில் தோட்டக் கம்பனியின் பங்களிப்பு கிடைக்கப்பெறாமையால் ரூபா 30,567 தொகை ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஏப்ரல் 23 ஆந் திகதி கினிகத்ஹேன கெனில்வத்த பிரதேசத்தில் விபத்தில் சிக்குண்டிருந்த ஊவா மாகாண இளைஞர் விவகார, விளையாட்டுக்கள், சமூக நலனோம்பல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்வலு மற்றும் சக்திவளம், புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சிற்கு உரித்தான வாகனத்திற்கு ரூபா 1,394,165 சேதம் ஏற்பட்டிருந்ததுடன், அதற்காக காப்புறுதிக் கம்பனியிடமிருந்து ரூபா 1,029,418 இழப்பீடு கிடைத்திருந்தது. காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 364,747 நட்டம் தொடர்பில் ஊவா மாகாண நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் 104 ஆவது ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மொனராகலை பிரதேச சுகாதார செவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சீருடைகள் இருப்புப் பதிவேட்டின் படி, 2013 யூலை 19 ஆந் திகதியில் உள்ளவாறு காக்கிக் காற்சட்டை புடவையின் மீதி 1,967 மீற்றர்களாக காணப்பட்டதுடன் பௌதீக மீதி 1,105 மீற்றர்களாக இருந்தமையால் காக்கிக் காற்சட்டை புடவையில் 862 மீற்றர்கள் குறைவு எற்பட்டிருந்தது.

## 5.9 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

### 5.9.1 செயற்திட்டச் செயற்படுத்தல் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டாரவளை சுஜாதா செவன சிறுவர் இல்லத்தின் நீர்க்குளாய் வழியினையும் கிணற்றினையும் திருத்தவதற்காக ரூபா 415,774 செலவிடப்பட்டிருந்ததுடன் தரமற்ற 1 ½ அங்குல பீஜ குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் வழங்கப்படும் நீருடன் துருப்பிடித்தல்கள் கலக்கப்படுவதனால் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

நீரை வழங்குவதற்கு ஒரு நீரிரைக்கும் இயந்திரம் மாத்திரம் போதுமான போதிலும் ரூபா 580,946 செலுத்தி சென்ரிக் Vms 100/4/35, 1’ x 1’ வகை 02 நீரிரைக்கும் இயந்திரங்கள் 2011 மார்ச் முதல் 2012 திசெம்பர் வரை பொருத்தப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு இயந்திரத்தினைப் பாவித்து ரூபா 370,556 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் ஒரு இயந்திரம் நீரியந்திர நிலையத்திற்கு வெளியில் வைக்கப்பட்டிருந்தது.

ரூபா 1.6 மில்லியன் செலவிட்டு தூய நீரைப் பெற்றுக்கொள்வதற்காக நிறைவேற்றப்பட்ட இந்த வேலையிலிருந்து உரிய பிரகாரம் குடி நீரைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையால் 2011 மார்ச் முதல் 2012 திசெம்பர் வரை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நீரைப் பெற்றுக்கொண்டமைக்காக ரூபா 520,506 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்யப்பட்டிருக்காத ஒப்பந்தகாரச் சங்கமொன்றுக்கு பொரலந்த கால்நடை பண்ணையைச் சுற்றி வேளியமைத்தல் வேலைக்காக 275 கொங்ரீட் கம்பங்களை விநியோகிப்பதற்காக பெறுமதிசேர் வரி அடங்கலாக ரூபா 674,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) புத்தம தலாகங்கொட வீதியில் புத்தம முற்சந்தியை விரிவுபடுத்துதல் வேலைக்காக 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதி மொனராகலை பிரதேச பொறியியலாளரினால் சிங்ஹ கமத்தொழில் சங்கத்துடன் ரூபா 1,708,159 உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வேலையினை பூர்த்திசெய்த பின்னர் ஒப்பந்தகார சங்கத்திற்கு 2012 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 1,613,249 செலுத்தப்பட்டிருந்ததுடன் முற்சந்தி உரிய விதத்தில் செப்பனிடப்பட்டிருக்காமையால் கரைவுண்டு குழிகள் ஏற்பட்டிருந்தன.

ரூபா 247,835 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்ரீட் கம்பங்களின் இரு புறமும் மண் இடப்பட்டு நிரப்பப்படாதிருந்ததுடன் நீர் வடிந்தோடும் முறை குறித்த எவ்வித ஆய்வும் இன்றி வேலை நிறைவேற்றப்பட்டிருந்தமையால் கிரவல் இடப்பட்டு செப்பணிடப்பட்டிருந்த நிலப்பகுதியின் ஊடாக மழை நீர் வடிந்தோடுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அம்பகஸ்தோவ தியகொல ஆராவ வீதியை கொங்ரீட் செய்யும் வேலைக்காக ரூபா 1,668,293 செலவிடப்பட்டிருந்ததுடன் 2013 சனவரி 22 ஆந் திகதி பரீட்சிக்கப்பட்ட போது இடப்பட்டிருக்க வேண்டிய பிணைப்புக்கள் திட்மிடப்பட்டவாறு இடப்பட்டிருக்காமை, ஆரம்பிக்கும் இடத்திலிருந்து 80, 90 மற்றும் 100 மீற்றர் ஆகிய இடங்களில் வீதி குறுக்கே வெடிப்புற்றிருந்தமை மற்றும் வீதியின் இரு மருங்குகளும் நிரப்பி செப்பணிடப்பட்டிருக்காமை போன்ற குறைபாடுகள் வெளிப்பட்டன.

(உ) 2012 ஆம் ஆண்டின் பிரமாண அடிப்படையிலான முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெலிமடை பிரதேச செயலகத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட போகஹகும்புர, பிபிலிகமுவ, இஹல மெததுலான வீதிகளிலிருந்து வயல்வெளிகளுடன் தொடர்புறுகின்ற பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் மதகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 414,509 செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் மதகுகுகள் தனிப்பட்ட வீடொன்றிற்கு செல்லும் வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அந்த வீட்டுடமையாளரும் அந்த வீதியினை கணக்காய்வுத் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்காதிருந்ததுடன் இந்த வீதியிலிருந்து அந்த வீடு தவிர்ந்த ஏனைய வீடுகளிற்கோ அல்லது வயல்

வெளிக்கோ செல்வதற்கு முடியாதிருந்தது. அதன் படி, பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் மதகுகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 414,509 தொகை தனியொருவரின் நலனுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த நபரேனும் பயன்படுத்தாமையால் அத்தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஊ) ரூபா 702,353 செலவிடப்பட்டு மாவட்ட இயந்திர அலுவலகத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த பிரதான கிணறு, அதன் அருகே பயணிக்கும் சாக்கடை முறைமைக்கு வந்துசேரும் கழிவு காரணமாக 2010 யூன் 10 ஆந் திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் கிணற்றை நிர்மாணிப்பதற்கு முன்னர் குறித்த சாக்கடை முறைமை குறித்து பொறியியலாளர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் கருத்திற்கொண்டிருக்கவில்லை.

(எ) மாற்றுவழி சக்திவள அபிவிருத்தியின் கீழ் சூரிய ஒளியின் மூலம் மின்சாரத்தை வழங்குவதற்கான கிரயத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 08 மாத காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் தேசிய மின்வலு முறைமையிலிருந்து ஊவா மாகாணத்தில் மின்சாரத்தை வழங்குவதற்கு முடியாதுள்ள வீடுகளின் எண்ணிக்கை 1,925 ஆக காணப்பட்ட போதிலும், 2012 ஆம் ஆண்டில் சூரிய சக்தியிலிருந்து 20 வீடுகளிற்கு மாத்திரம் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் சிற்றளவிலான 06 மின் உற்பத்தி நிலையங்களை திருத்துவதற்காக ரூபா 2,500,000 தொகை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின்றி சிற்றளவு மின்சார உற்பத்தி நிலையங்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**5.9.2 செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபை நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,527,900 மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட எலேவல வீதியை விரிவாக்கல் செயற்திட்டத்திற்காக ரூபா 768,793 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2013 பெப்ரவரி 19 ஆந் திகதி வரை அச்செயற்திட்டம் முடிவுறுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மெதகம கொஹுகும்புர சிகிச்சையளித்தல் நிலையத்தினை புதுப்பித்தல் வேலை 2011 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 4,217,653 மதிப்பீட்டுக் கிரயத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 வரை அதில் ரூபா 738,480 செலவிடப்பட்டிருந்தது. வேலையின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமையால் இவ்வேலை பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) இங்கினியாகல மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய உத்தியோகபூர்வ இல்லத்தினை புதுப்பித்தல் மற்றும் கெப்படிபொல விசாகா பயிற்சிப் பாடசாலையின் நுழைவாயில்

காவலாளியின் அறை மற்றும் வீதியினை நிர்மாணித்தல் வேலைகள் ரூபா 3,481,486 மதிப்பீட்டுக் கிரயத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 வரை ரூபா 784,811 செலவிடப்பட்டிருந்த போதிலும், கடும் மழை மற்றும் வீதி மூடப்பட்டமை போன்ற காரணங்களால் செயற்திட்டம் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது.

## 5.10 அறவிடப்படுவதற்கும் தீர்க்கப்படுவதற்கும் உள்ள ஊழியர் கடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த 22 ஊழியர் கடன் முற்பண மீதிகள் ரூபா 95,350,116 கூட்டுத்தொகையாக இருந்ததுடன், 03 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அறவீடு நிலுவையாக காணப்பட்ட மீதிகள் ரூபா 56,268,004 கூட்டுத்தொகையாக இருந்தது.

(ஆ) சேவை இடமாற்றம் பெற்று வந்திருந்த 1,396 உத்தியோகத்தர்கள் தொடர்பில் தீர்க்கப்படாத கடன் மீதிகள் ரூபா 52,686,535 தொகையினையும் சேவை இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 2,202 உத்தியோகத்தர்கள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 89,926,352 கடன் மீதியையும் 2004 சனவரி 08 ஆந் திகதிய 2004/1 ஆம் இலக்க ஊவா மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கையின் படி கணக்குப் பொழிப்புக்களின் ஊடாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவி வறிதாக்கப்பட்ட, பதவி நீக்கம் செய்யப்பட்ட, மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 84 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,274,951 கூட்டுத்தொகையான கடன் மீதியை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2, 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது பிணைதாரர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் அக்கடன் மீதியை அறவிட்டுக்கொள்வதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முற்பணங்கள் கணக்கு வரவு மீதியில் செயற்பாடற்ற கடன் மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ள ஊவா மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினதும் ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினதும் ரூபா 695,913 தொகையான அறவிடப்படாதுள்ள கடன் மீதி தொடர்பில் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊவா மாகாண சபையிலிருந்து மத்திய அரசாங்கத்தின் ஒவ்வொரு அமைச்சிற்கும் திணைக்களங்களிற்கும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 667 உத்தியோகத்தர்களின் ரூபா

20,072,902 தொகையும் இடமாற்றம் பெற்று வந்திருந்த 993 உத்தியோகத்தர்களின் ரூபா 42,343,543 தொகையுமான அறவிடப்பட வேண்டிய மற்றும் தீர்க்கப்பட வேண்டிய கடன் மீதிகள், 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 3.2.1 மற்றும் 3.2.2 ஆம் பந்திகளின் பிரகாரம் ஒரே தடவையில் அறவிடுவதற்கோ அல்லது மாதாந்த தவணைக் கட்டணங்களையும் வட்டியினையும் மாதாந்தம் வருவித்துக் கொள்வதற்கோ அல்லது தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 5.11.1 பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாத சொத்துக்கள்

(அ) மீளாய்வாண்டில் ஊவா மாகாண பிரதான அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, கல்வி, உள்ளூராட்சி, கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாட்டு கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்கள் அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 432,990 தொகையான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாணத்தின் அச்சகத்திற்கு உரித்தான 217 சொத்து விடயங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.11.2 பொருள் மெய்மையாய்வு செய்யப்படாத நிறுவனங்கள்

(அ) ஊவா மாகாண சபையின் 04 அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 756 மற்றும் 757 இன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வை நடாத்தியிருக்கவில்லை.

(ஆ) ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், மொனராகலை கூட்டுறவு அபிவிருத்தி உப ஆணையாளர் அலுவலகம் மற்றும் கூட்டுறவு முகாமைத்துவ பயிற்சி நிறுவனம் என்பவற்றின் 2012 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைளினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்த குறைவுகள் சம்பந்தமாக ஊவா மாகாண நிதி ஒழுங்குவிதிகள் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.12 வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

(அ) ஊவா மாகாண கொள்கை திட்டமிடல் திணைக்களத்திற்காக ரூபா 6,126,904 செலவிடப்பட்டு 2009 ஆம் அண்டில் நிர்மாணிக்கப்பட்ட 06 உறங்கும் அறைகளுடன் கூடிய ஏறத்தாழ 3500 சதுர அடிகள் கொண்ட இரட்டை மாடி சுற்றுலா விடுதியும்

அதற்கான சமையலறை உபகரணங்களும் ரூபா 834,022 இற்கான தளபாடங்களும் நோக்கத்திற்கு முரணாக 2009 செப்தெம்பர் 09 ஆந் திகதி முதல் எவ்வித அறவீடுகளுமின்றி வெளி நபர் ஒருவரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 பெப்ரவரி முதல் 2013 பெப்ரவரி வரை விடுதிப் பொறுப்பாளருக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் ரூபா 500,201 ஆகும்.

(ஆ) வெலிமடை பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 09 ஏக்கர் 13 பேர்ச் அரசாங்கக் காணி ரூபா 300 ஆன வருடாந்த குத்தகைக்கு விவசாய நடவடிக்கைக்காக 1956 நவம்பர் 01 முதல் 1966 நவம்பர் 01 ஆந் திகதி வரையான காலத்திற்கு குருதலாவ புனித தோமஸ் கல்லூரிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. காணியின் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும் குத்தகையினை செலுத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை தொடர்ந்து 47 வருடங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் உடன்படிக்கைக்கு முரணாக அதில் தனியார் பாடசாலையொன்று நடாத்தி வரப்பட்டிருந்தது. காணியின் எல்லைகள் பாதுகாக்கப்படாமையால் ஆட்களினால் அண்ணளவாக ஒரு ஏக்கர் காணி கைப்பற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. 1996 முதல் அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகையாக கணிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,212,500 தொகையினுள் தண்டப்பணம் உள்ளடங்கியிருக்காமையால் சரியான தன்மையினை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் தண்டப்பணத்துடன் அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 5 மில்லியனுக்கும் அதகமாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கஹகொல்ல விவசாய ஆராய்ச்சி நிறுவனத்திற்குரிய 1.117 ஹெக்டயார் விஸ்தீரணமான அரசாங்கக் காணி 2004 முதல் 2008 ஆம் ஆண்டு வரை ரூபா 180,000 தொகைக்கும் 2009 ஆம் ஆண்டு முதல் ரூபா 270,000 தொகைக்கும் வருடாந்த குத்தகைத் தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக 1998 திசெம்பர் 30 ஆந் திகதி முதல் 50 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2004 முதல் குத்தகையினைச் செலுத்தத் தவறியமையால் 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் வட்டி அடங்கலாக மாகாண சபைக்கு இழப்பாகியிருந்த நிலுவை வருமானம் ரூபா 2,700,000 ஆகும்.

இந்த வருமானத்தை அறவிட்டு மாகாண சபைக்கு அனுப்பி வைப்பதற்காக பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மாகாண சபையும் அந்த வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கு காத்திரமான தலையீட்டினை மேற்கொண்டிருக்கவில்லை.

## 5.13 பதவியணியினர் நிர்வாகம்

### 5.13.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் - பாடசாலை பதவியணி நீங்கலாக**

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 976 | 852 | 124 | - |
| மூன்றாம் நிலை | 2,828 | 2,308 | 520 | - |
| இரண்டாம் நிலை | 19,748 | 18,640 | 1,108 | - |
| ஆரம்ப நிலை | 4,260 | 4,764 | - | 504 |
| ஏனையோர் (அமைய, தற்காலிக) | 21 | 426 | - | 405 |
| மொத்தம் | 27,833 | 26,990 | 1,752 | 909 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அதிபர்கள் | 800 | 869 | - | 69 |
| ஆசிரியர்கள் | 15,620 | 15,841 | - | 221 |
| நிகழ்ச்சித்திட்ட / முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் விடுதிக் கட்டுப்பாட்டாளர் | 281 | 210 | 71 | - |
| சிற்றூழியர்கள் | 856 | 1,281 | - | 425 |
| மொத்தம் | 15,557 | 18,201 | 71 | 715 |

### 5.13.2 ஆசிரியர் மிகை, பற்றாக்குறை மற்றும் இணைப்புச் செய்தல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பண்டாரவளை வலயக் கல்விப் பிரிவின் பிலக்வூட் 01 ஆம் இலக்க தமிழ் வித்தியாலயத்தில் 04 பாடங்களுக்காக மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 05 ஆக உள்ளதுடன் 03 பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை 06 ஆக உள்ளமையால் ஆசிரியர் சமநிலைக்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பண்டாரவளை வலயக் கல்விப் பிரிவிற்குரிய திக்உல்பத பிரஞாசார வித்தியாலயத்தில் ஆங்கிலம், நடனம், சுகாதாரம் மற்றும் உடலியல் கற்கை போன்ற பாடங்களுக்காக முறையே 3, 2 மற்றும் 2 வீதம் ஆசிரியர் மிகை காணப்பட்டதுடன் இப்பாடசாலையில் சம்பளம் பெற்று ஏனைய பாடசாலைகளிற்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றிவரும் 06 ஆசிரியர்கள் காணப்பட்டமையால் ஆசிரியர் சமநிலையை ஏற்படுத்துவதற்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) ஹல்துமுல்ல பிரிவிற்குரிய 08 பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் பற்றாக்குறை 08 ஆக இருந்ததுடன் 18 பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை 18 ஆகும்.

(ஈ) பதுளை கல்வி வலயத்தில் பதுளை ராகுல வித்தியாலயத்தில் 1 தொடக்கம் 5 ஆண்டு வரை காணப்படும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 66 ஆக இருந்ததுடன் 06 ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். குறித்துரைத்த நேர அட்டவணையொன்று இல்லாத ஆசிரியர்களின் எண்ணிக்கை மூன்றாகும். மணைப் பொருளியல் பாடத்திற்காக ஒரு ஆசிரியர் மாத்திரமே தேவைப்பட்ட போதிலும், மூன்று ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆங்கிலப் பாடத்திற்காக பாடசாலையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை 03 ஆன போதிலும், 06 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பாடசாலையின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 222 ஆனதுடன் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 53 ஆக காணப்பட்டமையால் ஒரு ஆசிரியருக்கான மாணவர் எண்ணிக்கை 4 ஆகும். இப் பாடசாலையில் பாரிய ஆசிரியர் மிகை காணப்படுவதுடன் அவர்களுக்கு 2003 நவம்பர் 07 ஆந் திகதிய 2003/38 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நேர அட்டவணை வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதன் காரணமாக உரிய பிரகாரம் நேர அட்டவணைகள் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் சோர்வடைந்திருந்ததுடன் ஆசிரியர்களிடமிருந்து பயனுள்ள பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாது போயிருந்தது. வலயத்தினுள்ளும் மாகாணத்தினுள்ளும்

பின்தங்கிய பாடசாலைகளில் பாரியளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதுடன் பாடசாலைகளிற்கிடையே ஆசிரியர் சமநிலையை ஏற்படுத்துவதன் மீது முகாமைத்துவத்தின் கவனம் திரும்பியிருக்கவில்லை. இந்த வித்தியாலயத்தில் 21 ஆசிரியர்களின் சேவைக்காலம் 08 ஆண்டுகளிற்கும் மேற்பட்டதாகும்.

(உ) பண்டாரவளை கல்வி வலயத்தில் 20 பாடசாலைகளில் 20 அதிபர்கள் தொடர்ச்சியாக 14 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட சேவைக்காலத்தைக் கொண்டவர்களாக காணப்பட்டனர்.

(ஊ) பதுளை கல்வி வலயத்தில் பதுளை விஹாரமஹா தேவி மகளிர் கல்லூாயில் மேலதிக ஆசிரியர் எண்ணிக்கை 14 ஆக காணப்பட்டதுடன் 08 – 14 வருடங்களுக்கு இடைப்பட்ட தொடர்ச்சியான சேவைக் காலத்தைக் கொண்டோர் எண்ணிக்கை 30 ஆகும்.

**5.13.3 கிராந்துருகோட்டே வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவு**

நாளொன்றிற்கு ஏறத்தாழ 200 நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்ற கிராந்துருகோட்டே வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவுக்கு தாதியொருவரும் உதவியாளர் ஒருவரும் மாத்திரம் இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்கள் நீண்ட காலமாக அந்த இடத்திலேயே சேவையாற்றி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

**5.13.4 முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

ஊவா மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சாரதியொருவர் முறையற்ற விதத்தில் மூன்று ஆண்டுகளாக ஊவா மாகாண கல்வி மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

**5.13.5 ஆட்சேர்ப்பு நடைமுறைகளுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 செப்தெம்பர் 06 ஆந் திகதிய டீஎம்எஸ்பீ/1/ஊவா/அமை.சங்/2 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தினால் ஊவா மாகாண நூலகச் சேவைகள் சபைக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 06 பதவிகளுக்கு 2013 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரை உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் நீண்ட காலமாக நூலகச் சேவைகள் சபையின் வருமானத்தில் நாளொன்றிற்கு ரூபா 500 படியும், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றிற்கான பங்களிப்பினையும் செலுத்தி 09 உத்தியோகத்தர்கள் தற்காலிக மற்றும் அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) ஊவா மாகாண நூலகச் சேவைகள் சபை நியதிச்சட்டத்தின் நியமனங்கள் தொடர்பான அத்தியாயத்தின் (i) ஆம் ஏற்பாட்டின் படி ஊவா மாகாண கல்விக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட மாதாந்தம் ரூபா 37,500 சம்பளமும் மாகாண சபைக்குச் சொந்தமான வாகனமொன்றையும் பயன்படுத்தி வருகின்ற ஊவா மாகாண நூலகச் சேவைகள் சபையின் தலைவர் சம்பந்தமாக மாகாண நூலகச் சேவைகள் சபையின் நியதிச்சட்டத்தில் அவரது கடமைகள், பொறுப்புக்கள், வேதனங்கள் மற்றும் ஏனைய நிபந்தனைகள் தொடர்பில் எவ்வித ஏற்பாடுகளும் காணப்படாமையால் மாகாண நூலகச் சேவைகள் சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான அவரது பங்களிப்பினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

## 5.14 வங்கிக் கணக்கிணக்கங்கள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் 04 நிறுவனங்கள் தொடர்பில் இனங்காணப்படாத வரவு வைத்தல்களின் பெறுமதி ரூபா 1,179,972 ஆக காணப்பட்டதுடன் 04 நிறுவனங்கள் தொடர்பில் இனங்காணப்படாத செலவு வைத்தல்களின் பெறுமதி ரூபா 4,100,588 ஆக காணப்பட்டது.

## 5.15 உள்ளூராட்சி நிறுவனங்களின் கண்காணிப்பு

மாகாண சபைக் கண்காணிப்புகள் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் ஊவா மாகாணத்தில் உள்ள 28 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் காணப்படுகின்ற கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகளைக் கருத்திற்கொள்கையில் இக் கண்காணிப்பு நடவடிக்கைகள் திருப்திகரமாகச் செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 5.15.1 உள்ளூராட்சி நிறுவனங்களின நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

ஊவா மாகாணத்திலுள்ள 28 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மீளாய்வாண்டிற்காக குறித்த தினத்தில் 06 உள்ளூராட்சி நிறுவனங்கள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தன.

### 5.15.2 நிலுவை வருமானம்

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் ஊவா மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்க வேண்டிய இறை வரி மற்றும் ஏனைய வருமானத் தொகையான ரூபா 6,072,910 நிலுவையாகக் காணப்பட்டன.

(ii) 1979 இன் 42 ஆம் இலக்க மாநகர சபை மற்றும் நகர சபை (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினதும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 129(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரமும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டண வருமானத் தொகையான ரூபா 92,799,862 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வழங்கப்பட்டிருந்த மிகைஅறவீட்டுச் சான்றிதழுக்காக அறவிடுவதற்குள்ள பணம்**

ஆண்டின் இறுதியில் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விதிக்கப்பட்டிருந்த மிகை அறவீடுகளுக்காக ரூபா 7,384,154 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயர்வேதத் திணைக்களத்தின் கீழ் ஒரு மருந்து உற்பத்தி ஆலை, 06 ஆயுர்வேத வைத்தியசாலைகள், 20 மத்திய மருந்தகங்கள் மற்றும் 02 மூலிகைத் தோட்டங்கள் காணப்பட்ட போதிலும், 06 ஆயுர்வேத வைத்தியசாலைகள், 19 மத்திய மருந்தகங்கள் மற்றும் ஒரு மூலிகைத் தோட்டம் என்பன மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதிப் பராமரிப்பிற்கும் வீதிப் புனரமைப்பிற்காகவும் 215 செயற்திட்டங்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் தொடர் வேலைகளிற்காக ரூபா 300 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை மாகாண சபையின் மொத்த மூலதன ஏற்பாட்டில் 8.6 சதவீதமாகக் காணப்பட்டது. இம் மூலதனச் செலவினக் கண்காணிப்பிற்காக நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு

மேற்கொள்ளப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாயத் திணைக்களம், பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் விவசாய ஆலோசனை அலுவலகம் உள்ளிட்ட 60 நிறுவனங்களில் எந்தவொரு நிறுவனத்திலும் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள பதுளை பிரதி மாகாண சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், 04 ஆதார வைத்தியசாலைகள், 51 மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் 27 மத்திய மருந்தகங்களில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்காததுடன் 95 நிறுவனங்களில் 02 நிறுவனங்களுக்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் மீளாய்வாண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்திருந்தன.

(உ) ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மீளாய்வாண்டிற்காக போதயிளவு உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மாகாண சபையின் நிதி முன்னெச்செரிக்கைத் தன்மையினையும் நிதி முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்காக மாகாண சபையின் 24 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) மாகாண சபை அபிவிருத்தி திட்டம்

(ஈ) உள்ளகக் கணக்காய்வு

(உ) உள்ளூராட்சி அதிகாரசபை கண்காணிப்பு

(ஊ) பதவியணி முகாமைத்துவம்

(எ) சொத்து முகாமைத்துவம்

(ஏ) ஒப்பந்த முகாமைத்துவம்